26 DEC 1996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை (08-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 12

# ஜெயலலிதா நேற்று கைது!

சென்னை, டிச. 8



தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

எட்டரைக் கோடி ரூபா வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கிய ஊழல் தொடர்பாகக் கைதான அவரை சென்னை முதன்மை அமர்வு நீதிபதி ஏ.இராமமூர்த்தி இம்மாதம் 21 ஆம் திகதி வரை காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனை அடுத்து இவர் பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் சென்னை மத்திய சிறைக்குக் கொண்டு செல்லப் பட்டார்.

வர்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள் ஊழலில் செல்வி ஜெயலலிதா கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவருக்கு எதிராக மேலும் 6 வழக்குகள் இருந்து வருகின்றன. மொத்தம் 7 வழக்குகளிலும் அவருக்குப்பிணை வழங்கமுடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் தீர்ப்பளித்திருந்தது.

வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஊழல் வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர் செல்வ கணபதி, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் எஸ். எம். பாண்டே, எம். சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுக் காவலில் உள்ளனர்.

இந்த வழக்கு, 45 ஆயிரம் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை 65 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட விலைக்கு வாங்கியது தொடர்பானதாகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



ஆனைக்கொரு காலம்
பூனைக்கொரு காலம்
பாருங்கோ!

# அமைச்சர் ரத்வத்த, ராணுவ தளபதி ஐ. ஜி. பி. ஹெலி விபத்தில் தப்பினர்!

## திருமலை நகரினுள் தற்கொலைப் படை?

திருகோணமலை, டிச. 8

திருகோணமலை நகருக்குள் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டு தாரிகள் இருவர் புகுந்து விட்டதாகக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுத் திருமலை நகர் சுற்றி வளைக்கப்பட்டதால் நகர் ஸ்தம்பிதம் அடைந்தது.

நேற்றுக் காலை படையினர் சகல சந்திகளையும் முற்றுகையிட்டு சகலரையும் அந்த அந்த இடத்திலேயே நிற்குமாறு பணித்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான எதிர்ப்பு ரவைகள் சிக்கின!

அளவை, டிச. 8

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்றில் ''பைவ் சீரோ'' ரகத்தைச் சேர்ந்த விமான எதிர்ப்பு ரவைகள் அளவைப் பொலீஸாரால் கைப்பற்றப் பட்டன.

வான் சாரதியின் பிரயாணப் பைக்குள் இவை இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த வானின் சாரதியும் அதில் பிரயாணம் செய்த கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவரின் இரு ஆண் பிள்ளைகளும் பொலீஸாரால் கைது செய்யப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா காட்டில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, டிசம்பர் 8

**பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் றொஹான் தளுவத்த, பொலீஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி.) டபிள்யூ.பி. ராஜகுரு, வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஆகியோர் நேற்று நடைபெற்ற ஹெலி விபத்தில் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர்.**

அவர்களை ஏற்றிச் சென்ற பெல்-412 ரக ஹெலிக்கொப்டர் சுமார் மூன்று மணித்தியாலங்கள் காணாமற் போய் வவுனியாவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் தரை இறக்கப்பட்டது.

தமது ஹெலி தரையிறக்கப்பட்ட பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் என்றும் சுமார் 4,5 மணித்தியாலங்கள் நடந்தே வந்து மற்றொரு ஹெலிக்கொப்டரில் ஏறி தாம் சென்றதாகவும் அமைச்சர் ரத்வத்த தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து புறப்பட்டு மணலாறுப் பிரதேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே ஹெலி காணாமற் போயிற்று.

இலக்கின்றி மூன்று மணித்தியாலங்கள் சுற்றித் திரிந்த பின்னர் அது வவுனியாவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் தரை இறக்கப் பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 21 இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்!

திருகோணமலை, டிச. 8

வடபகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த மேலும் 21 இளைஞர்கள் விடுவிக்கப் பட்டனர்.

அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இந்த 21 பேரும் நீதிமன்ற விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து கடந்த வியாழக் கிழமை திருகோணமலைக்குக் கொண்டு வரப் பட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் வேறு இடத்துக்கு மாற்றம்

இம் மாதம் 11 ஆம் திகதி ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாவதை முன்னிட்டு வவுனியாவிலுள்ள பாடசாலைகளில் தங்கி உள்ள அகதிகள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட உள்ளனர்.

வவுனியா தமிழ் வித்தியாலயம், சி.சி.டி. எம்.எஸ் பாட சாலை, பூந்தோட்டம் பாடசாலை, வெளிக்குளம் பாடசாலை, நெழுக்குளம் பாடசாலை, வேப்பங்குளம் பாடசாலை, பரக்கும் பாடசாலை ஆகியவற்றி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் 6 படையினர் கண்ணிவெடிக்குப் பலி!

கொழும்பு, டிச. 8

மீசாலையில் இரு கிளைமோர் கண்ணிவெடிகள் வெடித்ததில் 6 படையினர் கொல்லப்பட்டனர்.

காவல் நிலையத்தில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் படையினர் சிலர் குளித்துக் கொண்டிருந்த இடத்தில் நேற்று முன் தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இருகிளைமோர் கண்ணி வெடிகளையும் 'அமுக்கசுவிட்ச்' ஒன்றில் பொருத்தி கிணற்றுக்கு அருகில் புலிகள் மறைத்து வைத்திருந்தார்கள் என்றும் —

படையினரில் ஒருவர் தற்செயலாக சுவிட்சின் மீதுமிதித்த போது கிளைமோர்வெடி வெடித்ததாகவும் — பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கைதடி வடக்கில் இடம் பெற்றதாக நேற்றைய உதயனில் செய்தி வெளியாகி இருந்தது. ஆனால் இப்போது மீசாலையிலேயே நடைபெற்றது தெரியவந்திருக்கிறது. (இ-3)

# கொழும்புத் துறைமுகத்திலிருந்து பெருமளவு கொள்கலங்கள் கடத்தல்

## 2 தமிழ் வர்த்தகர், 7சுங்க அதிகாரிகள் கைது!

கொழும்பு, டிச. 8

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொள்கலன்களைக் கடத்திய மோசடி ஒன்று அம்பலமாகியதை அடுத்து இரு தமிழ் வர்த்தகர்களும் ஏழு சுங்க அதிகாரிகளும் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வருடகாலமாக இந்த மோசடி இடம் பெற்று வந்ததாகவும் —

குறைந்தது நூறு கொள்கலன்களாவது இப்படிக் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் — இரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கொள்கலன்களில் குறைந்தது ஏழு கொள்கலன்களில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் வந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சி. ஐ. டி. பிரிவு பிரதிப் பொலீஸ் மா அதிபர் சி. டி. சுமணசேகர, சி. ஐ. டி. பணிப்பாளர் ஏ. கே. ஹேமச்சந்திரா ஆகியோரின் பணிப்புரையின் பேரில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பந்துல விக்கிரசிங்க தலைமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்தாத விதை நெல்லை அடுத்த போகத்துக்கு சேமியுங்கள்

## விவசாயிகளுக்கு ஆலோசனை

வலிகாமம் தெற்கு, டிச. 8

இவ்வருடம் காலபோக விதைப்புக்கென விவசாயிளுக்கு வழங்கப்பட்ட விதை நெல்லை விதைப்பதற்குப் பயன்படுத்தாவிட்டால் அவற்றைக் கவனமாகச் சேமித்து வைத்து அடுத்த போகத்துக்குப் பயன்படுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்விதைநெல்லைஇடையிடையே வெயிலில் காயப்போட்டு பத்திரப்படுத்தி வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

உடுவில், சங்குவேலி பகுதிகளில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் அவர் இவ்வாலோசனையைத் தெரிவித்தார்.

ஏற்கனவே விதைக்கப்பட்டு பயிராக உள்ள நெற்பயிர்கள் தொடர்பாக விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இவ்வருட காலபோகத் தேவைக்கென விண்ணப்பித்த விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தினரால் இதுவரை இருபதாயிரம் புசல் விதை நெல் விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் 15 ஆயிரம் புசல் விதை நெல் விநியோகிக்கப்பட உள்ளது என்று அங்கு தகவல் வெளியிடப்பட்டது.

உலக உணவு ஸ்தாபனத்தின் விவசாய ஆலோசகர் திரு. கே. குணரத்தினம், உலக உணவு ஸ்தாபன பாடவிதான உத்தியோகத்தர் திரு. பி. மரியநாயகம் மற்றும் பாடவிதான உத்தியோகத்தர் திரு. எஸ். தேவராசன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கினர்.

(உ- 152)


யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

க. பொ. த. (உ/த) - 98
(கலை, வர்த்தகம்)

**அனுமதி - 1997**

மேற்படி வகுப்புகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

**முடிவுத் திகதி: 27 - 12 - 96**

- அதிபர்.

[சி/3696]



**ஸ்ரார் கல்வி நிலையம்**
சிவன் வீதி, சுன்னாகம்.

A|L 1998
கலை வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம்

கணக்கியல் — கொலின்
பொருளியல் — மோகன்
வர்த்தகம் — முரளி
அளவையியல் — மனோ
தமிழ் — ஆர்த்திகன்
இந்துநாகரிகம், இந்து சமயம் — பிரபல ஆசிரியர்

ஏனைய பாடங்களும் முன்னணி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.

**ஆரம்பம்: 09-12-1996 மாலை 3. 00 மணி**

(9047) - நிர்வாகி



## இரங்கற் திருப்பலி

### பாக்கியநாதர் பீற்றர் சிறீதரன்

27-11-96 அன்று ஜேர்மனியில் அகால மரணமடைந்த நாவற்குழியைச் சேர்ந்த பாக்கியநாதர் பீற்றர் சிறீதரனின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாவற்குழி, புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று (8-12-96) ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவர் காலஞ்சென்ற பாக்கியநாதர் மற்றும் திருமதி பாக்கியநாதர் மேரி மார்க்கிறேட் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி பாஸ்கலீனா, விக்ரர் இராஜேஸ்வரன் (சுவிஸ்), மேரி சரோஜினியா (பிரான்ஸ்), மேரி குளோறியா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் திருமதி இராசேந்திரம் எலிசபெத்தம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காணிக்கைநாதன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மைத்துனரும், திரு. திருமதி அருட்பிரகாசம் — மேரிறோஸ் தம்பதிகளின் ஞானப் புதல்வரும், இம்மானுவேல் (இளைப்பாறிய ஊழியர் ரயில் திணைக்களம்), அருளநேசன் (லண்டன்), குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி செல்வராக்கினி, திருமதி சிசிலியம்மா, திருமதி மரியரஞ்சிதம், திருமதி மேரி அஞ்சலீனா, திருமதி ஞானசோதி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. ஸ்ரீபன்
(சிறிய தகப்பன்)

பாடசாலை வீதி,
நாவற்குழி.

[44013]


## கிறிஸ்தவ பாட பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ்ப்பாணம் - நல்லூர் கல்விக் கோட்டத்தில் உள்ள ஜி. சீ. ஈ. (சாதாரணதர) மாணவர்களுக்கான கிறிஸ்தவப் பாடப்பரீட்சை ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறும்.

வினாத்தாள் பொதிகளை பாடசாலைகள் குறித்தொதுக்கிய இணைப்பு நிலையங்களில் நாளை காலை 8. 30 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாமென கோட்டக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)


**C. C. A.**
வெலிங்டன் சந்தி,
யாழ்.
வணிகபுள்ளிவிவரவியல்
நிகழ்தகவு
ஆசிரியர் S. திரிகரன் B. Sc.
ஆரம்பம்:- 11-12-96
(44019)



**C. C. A.**
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

கணக்கியல் A/L
97 — ஒற்றைப் பதிவு
98 — தொங்கல் க/கு
96 — DAY கம்பனிக/கு

ஆசிரியர்:-
Mr. நித்தியானந்தராஜா
(B.B.A.)

★ மேற்குறிப்பிட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ 98 புதிய பிரிவு ஆரம்பமாகி உள்ளது.

நிர்வாகம்
(44018)


## ஓவியப் போட்டி முடிவுகள்

உலக உளநல நாளையொட்டி, ''உதயன்'' நிறுவன ஆதரவில் ''சாந்திகம்'' அமைப்பினால் நடத்தப்பட்ட ஓவியப் போட்டி முடிவுகள் வருமாறு:-

★ முதலாவது தெரிவு:- செல்வி த. துகிதா
மே/பா. திருமதி ப. தர்மலிங்கம்
'பகாஸ்தான்' மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

★ இரண்டாவது தெரிவு:- திரு. A. இராசையா
43, றக்கா ரோட், சுண்டிக்குளி.

★ மூன்றாவது தெரிவு:- செல்வி வின்சென்ற் அனற் ராணி
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்,
(ஆங்கில பாடசாலை)
யாழ்ப்பாணம்.

★ நயத்தகு தரத்தை அடைந்த ஓவியங்களைப் படைத்தோர்:-

திரு. செ. டியன்சி மிராண்டா, 15/7, 5 ஆம் குறுக்குத் தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.

திரு. க. நிமலதாஸ், நாவலம்பதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

K· ரட்னேஸ்வரன், யா / மானிப்பாய் மேமோரியல் (ஆங்கில பாடசாலை) மானிப்பாய்.

திரு. சி.சண்முகராசா, 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர்.

திரு. சிங்கன் நேசலிங்கம், கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

செல்வி சுகந்தி சின்னத்தம்பி, ஆண்டு 13 'A' யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

செல்வி சுகிர்தா தெய்வேந்திரன், 670, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

செல்வி சுதர்சினி செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

ஐ. தயாநிதி, 16/2, லோட்டஸ் றோட், வண்ணார் பண்ணை.

செல்வி யசோதா சின்னத்தம்பி, 11, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

இந்த ஓவியப்போட்டியில் மிகக் கணிசமான எண்ணிக்கையினர் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். உளநலம், ஓவியம் ஆகிய துறைகளைச் சார்ந்த ஐவரைக் கொண்ட நடுவர் குழு, படைப்புகளை மதிப்பீடு செய்து சிறந்த ஓவியங்களைத் தெரிவு செய்தது. போட்டிக்குக் கிடைத்த ஓவியங்களில் மிகப் பலவும் தரமானவையாக அமைந்திருந்தன.

இப்போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— போட்டி அமைப்புக் குழு


**பண்டிகைக்கால விற்பனை**

"கபிலாவின் காலணிகள்
காலத்தின் கவசங்கள்"

★ பாடசாலைக் காலணி வகைகள்
★ றபர் காலணிகள்
மற்றும்
★ ஆண், பெண் காலணிவகைகள்
★ Bata, D. S. I. காலணிகளை

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

**கபிலா காலணியகம்**
இல. 4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(44022)



15 ஆவது வருட சேவையில் ஒளிரும்
மாணவமணிகளின் நம்பிக்கை நட்சத்திரம்

**யூப்பிட்டர் கல்வி நிலையம்**
கண்டி வீதி, சங்கத்தானை.

புதிய கல்வியாண்டு 1997 இற்குரிய

★ ஆண்டு 4, 5, 6, 7, 8, 9, 10 வகுப்புகள்.
★ ஆண்டு 5 புலமைப் பரிசில் வகுப்புகள்.
அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
★ A/L, 1997, 98 தூய, பிரயோக கணிதம்.
ஆசிரியர்: திரு. க. தெய்வேந்திரம்
(திக்கம் மாஸ்டர்)
ஆரம்பம்:- 09-12-1996 திங்கள் பி. ப. 3.30
முன்கூட்டியே அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்க.
★ O/L - 1997 - G.A.Q., B.A.

யாழ்ப்பாணம், பேராதனைப் பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

(சி/3697)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் [stamp]

## பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில்

# பிரதமர் மேஜரின் அரசு பெரும்பான்மை இழந்தது

லண்டன் டிச. 8

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் கொன்சர்வேட்டிவ் கட்சி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழந்துள்ளது என செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டதே இதற்குக் காரணமாகும்.

சேர் ஜோண் கோஸ்க் என்ற அந்த உறுப்பினர் தனது சேவையிலுள்ள மருத்துவமனை மூடப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவை அறிவித்தார். அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதை தான் விலக்கிக் கொள்வதாகவும் கட்சிக் கட்டளைக்குப் பணிந்து நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதையும், வாக்களிப்பதையும் தான் இனிப் பொருட்படுத்தப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

651 ஆசனங்களைக் கொண்ட பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஒரேயொரு பெரும்பான்மை வாக்குத்தான் இருந்து வந்துள்ளது. (உ-10)

## ஐ. நா. செயலாளர் பதவிக்கு 4 ஆபிரிக்க நாடுகள் போட்டி

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்குப் போட்டியிட நான்கு ஆபிரிக்க நாடுகள் முன்வந்துள்ளன.

கானா, நைகர், ஐவரிக் கோஸ், மொறட்டானியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் தங்களது வேட்பாளர்களின் பெயர்களை பாதுகாப்பு மன்றத்தில் முறையாகத் தாக்கல் செய்துள்ளனர்.

உலக நிறுவனத்தின் அமைதிக் காப்புக்கு உதவி தலைமைச் செயலாளராகவிருக்கும் கானாவைச் சேர்ந்த கொபி அனந், ஐவரிக் கோஸின் வெளியுறவு அமைச்சர் அமாரா அஸ்வின், இஸ்லாமிய நிறுவனத்தின் தலைமைச் செயலாளரான நைகரைச் சேர்ந்த ஹமீட் அல் ஹமீட், மொறட்டானியா நாட்டின் வெளியுறவு அமைச்சர் முகமது அப்துல்லா ஆகியோரின் பெயர்களே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய ஐ. நா. செயலாளரான பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் பதவிக்காலம் இந்த டிசம்பருடன் முடிவடைவதும் —

அமெரிக்காவின் எதிர்ப்புக் காரணமாக இன்னொரு தடவை அப்பதவிக்குப் போட்டியிடுவதில்லை என அவர் முடிவு செய்திருப்பதும் தெரிந்தவையே. (உ-10)

## றுவாண்டா அகதிகள் திரும்ப வேண்டும்

டார்-எஸ்-சலாம், டிச. 8

தன்சானியாவில் தஞ்சமடைந்துள்ள சுமார் 6 லட்சம் றுவாண்டா அகதிகள் இம்மாத இறுதிக்குள் தங்கள் நாட்டுக்குத் திரும்பிவிட வேண்டும் என தன்சானியா தெரிவித்துள்ளது என ஐ.நா. அகதிகள் பிரிவு அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-10)

## அரச எதிர்ப்புப் போராட்டம் யூகோஸ்லாவியாவில் தீவிரம்

யூகோஸ்லாவிய அரசுக்கு எதிரான போராட்டம் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. அதிபருக்கு எதிராக நேற்று முன்தினம் சுமார் ஒரு லட்சம் பேர் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் இறங்கியுள்ள மக்கள் மீது அடக்குமுறை நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என யூகோஸ்லாவியா அரசுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் எச்சரிக்கை விடுத்துள்ளன. (இ-10)

## சீன - பாக். உறவு; இந்தியா கவலை!

புதுடில்லி, டிச. 8

சீன ஜனாதிபதி ஷியாங் செமினின் இந்திய விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ள போதிலும் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் குறித்து இந்திய வட்டாரங்களில் நிலவிய கவலை முற்றாகத் தீரவில்லை என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சீனத் தலைவரின் விஜயம் ஒரு சாதகமான நிகழ்வு என்று முன்னாள் அமைச்சரும் ராஜதந்திரியுமான நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் விமர்சகர் ரஷீட் தாலிப், இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

சீனத் தலைவரின் இந்திய விஜயத்தில் பெரிதாக ஒன்றும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

1962 ஆம் ஆண்டிலிருந்து சீனா பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

சீனத் தலைவர் தமது இந்திய விஜயத்தின் முடிவில் நேரடியாக பாகிஸ்தானுக்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## உலக அரங்கில்

### விபரீதம்

லண்டனில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் கடந்த வெள்ளியன்று விபரீதமான நிகழ்வு ஒன்று இடம் பெற்றுள்ளது.

சுமார் 20 கோடி ரூபா சொத்து வழக்கு ஒன்றில் தோல்வியடைந்த எட்வேட் மேசன் என்பவர் நீதிபதி தனது தீர்ப்பை வழங்கியவுடனேயே தனது கையில் இருந்த கத்தியை எடுத்து தனதுகழுத்தையும் காதையும் அறுத்துக்கொண்டு இது அநீதி, அநீதி என நீதிமன்றிலேயே கத்தத் தொடங்கினார். இரத்தவெள்ளத்தில்நனைந்த அவர் உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (உ-10)

# வடபகுதியில் கைதான இளைஞர்களில் 149பேர் களுத்துறைச் சிறைச்சாலையில்

## தடுத்து வைக்கப்பட்டோர் பெயர் விவரம்

களுத்துறைச் சிறைச்சாலையில் 258 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 149 பேர் வடக்கைச் சேர்ந்தவர்கள்; பெருந் தொகையினர் இவ்வாண்டு கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஏனையோரில் 57 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தையும் 4 பேர் திருமலை மாவட்டத்தையும்சேர்ந்தவர்கள். 20 பேர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். 28பேர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

**வடக்கைச் சேர்ந்தோர் விவரம் வருமாறு:-**

★ செல்வரத்தினம் செல்வகுமார் — 321, கோண்டாவில் வடக்கு.

★ அம்பலம் மயில்வாகனம் — புதுமுறிப்பு.

★ செல்வநாயகம் டிலான் — யாழ்ப்பாணம்.

★ பி. செளந்தரராஜா — ஹொரவப்பொத்தானை வீதி, வவுனியா.

★ கந்தசாமி லிங்கேஸ்வரன் — 18, கொழும்புத் துறை.

★ நடராசா ரவி சுகந்தன் — 685, அராலி தெற்கு.

★ பரராஜசிங்கம் கௌரிதாஸ் — சண்டிலிப்பாய் தெற்கு.

★ சிவபாதசீலன் குணசீலன் — அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

★ சுப்பிரமணியம் தயானந்தன் — இணுவில் தெற்கு.

★ கிருஷ்ணசாமி குணபாலசிங்கம் — குமாரபுரம், கிளிநொச்சி.

★ சண்முகசுந்தரம் சதீபன் அல்லது ஈசன் — கண்டி வீதி, நாவற்குழி.

★ இரத்தினசிங்கம் இராமமூர்த்தி அல்லது காளி — சுப்பர் மடம், பருத்தித்துறை.

★ கிருஷ்ணபிள்ளை வெங்கடாசலம் — செல்வநகர், கிளிநொச்சி.

★ ஜோசப் சார்ள்ஸ் ரேஷ் அல்லது நிக்சன் — தேவமாதா கோயிலடி, 3 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

★ கிருஷ்ணபிள்ளை அருண்குமார் — மூளாய் வீதி, சுழிபுரம்.

★ இராமசாமி நவயோகசுந்தரம் அல்லது சின்னவன் — செம்மண்தீவு, முருங்கன், மன்னார்.

★ அழகையா ரவீந்திரன் — முல்லைவாய்க்கால், முல்லைத்தீவு.

★ தங்கவேலு புஸ்பகாந்தன் — மா இறம்பைக்குளம், 208, வவுனியா.

★ தில்லையம்பலம் அருளேஸ்வரன் — மணியர்குளம், பூவரசங்குளம்.

★ செல்லையா கேதீஸ்வரன் — 24, பெரிய தம்பனை, பூவரசங்குளம்.

★ செல்லத்துரை பிரதீபன் — 958/25, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

★ பாலசிங்கம் சுவேந்திரன் — ரயில் நிலைய வீதி, வவுனியா.

★ கணபதிப்பிள்ளை தேவராசா — ஹட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

★ ஜோர்ச் அருள்ராஜ் — 63/1, திருவையாறு, கிளிநொச்சி.

★ சித்திரவேல் மணிவண்ணன் — பூந்தோட்டம், வவுனியா.

★ குழந்தைவேல் செல்வராசா — கோணாவில், கிளிநொச்சி.

★ கந்தையா பேரின்பநாயகம் — முல்லைப்பிளவு, காரைநகர்.

★ இரத்தினவேல் மகேசன் — அல்வாய் வடக்கு, அல்வாய்.

★ கணபதிப்பிள்ளை நவரத்தினம் — சீனியர் லேன், நல்லூர்.

★ லோகநாதன் அமிர்தசங்கரன் — ஜெயபுரம், கிளிநொச்சி.

★ அந்தோனிப்பிள்ளை டெனிகரன் — குட்டியா தோட்டம், குருநகர் வீதி, நெல்லியடி.

★ முத்துச்சாமி நவஜீவன் — உடுவில் வீதி, மானிப்பாய்.

★ ஆறுமுகம் செந்தில்குமார் — பத்தினியம்மா வீதி, பண்டத்தரிப்பு.

★ வெங்கடாசலபதி செல்வம் — பாரதிபுரம், விசுவமடு, கிளிநொச்சி.

★ நாகராசா ஹரிசங்கர் — சங்கானை கிழக்கு.

★ தங்கராசா வசந்தநாதன் அல்லது குட்டித்தம்பி — மயிலணி வடக்கு, சுன்னாகம்.

★ வல்லிபுரம் விஸ்பவீரன் அல்லது வள்ளி — பலாலி வடக்கு, வசாவிளான்.

★ புலேந்திரன் ஜெகநாதன் — தாளையடி கிழக்கு, வடமராட்சி.

★ தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம் — தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

★ சோமசுந்தரம் பிரபாகரன் — கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

★ சித்திரவேல் சந்திரகுமார் — வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டி.

★ சோதிலிங்கம் சுரேஸ்குமார் — பாரதிபுரம், திருநெல்வேலி.

★ அருள்ராஜா குமார் அல்லது டிக்சன் — தவசிகுளம், கொடிகாமம்.

★ வேலு கணேஷ் — முகமாலை, இந்திராபுரம்.

★ கணபதிப்பிள்ளை தர்மேஸ்வரன் — உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

★ ஆறுமுகம் ரவி இல. 10, சின்ன ஆலம் வீதி, அரியாலை.

★ பூபாலசிங்கம் விஜயஹரன் — உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

★ குணரட்ணராஜா செல்வேந்திரன் — உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

★ கந்தையா ஜெயவீரசிங்கம் — காளிகோயிலடி, கோண்டாவில்,

★ வடிவேல் நடேசன் — கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ சுப்பிரமணியம் சுதாகரன் — ஒட்டுவில், மிருசுவில்.

★ துரைராஜா ரங்காதணி — கரம்பகம், மிருசுவில்.

★ முருகேசு கார்த்திகேசு — விதானபளை, மிருசுவில்.

★ சின்னத்துரை சிவராஜா — சாவளை, வரணி.

★ நாகலிங்கம் ஈஸ்வரன் — உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு.

★ நாகலிங்கம் அப்புலிங்கம் — 75/19, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ தம்பையா சிவநேசன் — அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

★ பொன்னுச்சாமி சிவநாதன் — 75/6, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ மார்க்கண்டு சிவசோதி — உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

★ இராசையா ஜெயபாலசந்திரா — உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

★ தர்மராசா சத்தியநவராஜா — வேலணை மேற்கு, ஊர்காவற்றுறை.

★ பிரான்ஸிஸ் செந்தில்குமாரன் — உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

★ சூசைப்பிள்ளை அன்ரனி — 84, சடற்கரை வீதி, நாவாந்துறை.

★ செல்லத்துரை கருணைநாதன் — கலட்டி, அச்சுவேலி.

★ செல்வரட்ணம் பரமேஸ்வரன் — உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

★ பஞ்சலிங்கம் ரவிவர்ணன் — அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

★ நாகராசா சதீஸ்ரூபன் — அம்மன் கோயிலடி, தச்சன்தோப்பு, கைதடி.

★ தேவராஜா ஜீவதயாபரன் — 85/2, மறவன்புலோ மத்தி, சாவகச்சேரி.

★ இராசையா செல்வராசா — 89, பூமாலை, எழுதுமட்டுவாள்.

★ கந்தப்பு தயாபரன் — கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

★ சிவமூர்த்தி சிவலிங்கம் — தினேஸ் பேக்கறி, மானிப்பாய்.

★ இராசமனோகரன் தயாபரன் — கோண்டாவில் ரயில் நிலைய அருகாமை, கோண்டாவில்.

★ மரியநாயகம் ஜேசுதாசன் — உசன், மிருசுவில்.

★ வேலுப்பிள்ளை பிரதீபன் — 116/1, மீசாலை வடக்கு, மீசாலை.

★ முத்துக்குமார் சந்திரகுமார் (சந்திரன்) — தெணியம்பை, வல்வெட்டித்துறை.

★ அச்சுதன்பிள்ளை பாலச்சந்திரன் — 41, யாழ் இந்துக்கல்லூரி வீதி, நீராவியடி.

★ பரமசாமி சிவபாலன் — கோப்பாய் வடக்கு.

★ இராசையா கணேசலிங்கம் — ஆனந்த வீதி, மானிப்பாய் கிழக்கு.

★ கந்தசாமி சிவநாதன் — புலோலி தெற்கு, புலோலி.

★ ஏரம்பு ராஜலிங்கம் — 2 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

★ பத்மநாதன் சிவநாதன் — 171/1, அரசடி வீதி, நல்லூர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறியியல், மருத்துவபோதனைக்கு தகுந்தாற்போல தமிழ் மொழி விருத்தி

## முடியும் என்கிறார் தஞ்சாவூர் பேராசிரியர்

திருகோணமலை, டிச.8

''பொறியியல் மற்றும் மருந்துவப் பாடங்களைப் போதிக்கும் அளவிற்கு தமிழ் மொழியை விருத்தி செய்ய முடியாது என்ற எண்ணம் அடிப்படையற்றது.''

அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்த தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் தமிழ் பீடத் தலைவர் பேராசிரியர் ராம் சுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இற்றைக்குச் சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்னர் — அதாவது 1896 ஆம் ஆண்டில் — யாழ்ப்பாணத்தில் மருத்துவ நூல் ஒன்று ஆங்கிலேயர் ஒருவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பல மருத்துவ மனைகளை நிறுவிய அமெரிக்கன் மிஷனரிமாரின் தேவைக்காக இந் நூல் எழுதப்பட்டது.

''மருத்துவப் பாடங்களைப் போதிப்பதற்கு தமிழ் மொழியைப் பயன்படுத்தலாம் என்பதற்கு இது போதுமான சான்றாகும்.

''அதிகமான தமிழர்கள் தங்களுக்கு குறிப்பிட்ட சில தமிழ்ச் சொற்கள் தெரியாதெனக் கூறி தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து பேசுவது நாகரிகமாகி விட்டது.

'ஆனால் இலங்கையிலுள்ள தமிழர்கள் தமிழ் மொழியை சரியான விதத்தில் பயன்படுத்துவது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

''ஏனைய நாடுகளில் உள்ள தமிழர்கள் தமிழ் மொழியை ஆங்கிலத்துடன் அல்லது வேற்று மொழிகளுடன் கலந்து பயன் படுத்துகின்றனர். இரு தமிழர்கள் சந்தித்து உரையாடும் போதும் இதே நிலைதான். இவ்வாறு செய்வதால் தமிழர்கள் தாங்களாகவே தங்களது தாய் மொழியான தமிழைக் கொலை செய்கின்றனர்.

''கிராமப்புற மக்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் தொடர்பான பல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் கற்றவர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று இவ்வாறான சொற்களைச் சேகரிக்கத் தவறுகின்றனர்'' — இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(உ-10)


## முதல் நன்மை அழைப்பு

கோப்பாயில் வசிக்கும்

திரு. திருமதி யோசேப் ஞானரத்தினம்

தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்

செல்வன் அனோச் டிலெக்சன்

அவர்கள்

கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில்

9-12-96 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு

நடைபெறும் திருப்பலிப் பூசையில் முதன் முறையாக சற்பிரசாதம் பெற இருக்கிறார். மேற்படி திருப்பலிப் பூசையிலும், அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் விருந்துபசாரத்திலும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. சூ. யோசேப்

திருமதி யோ. மாசில் மனோகரி

(பெற்றோர்)

மரியன்னை ஆலயம்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(43957)



பண்டத்தரிப்பு

பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

பொன்னாலை வீதி, சங்கானை

15 ஆவது வருடாந்தப்

## பொதுச்சபைக் கூட்டம்

15 - 12 - 1996

இடம்: தலைமையலுவலக கூட்ட மண்டபம்

காலம்: 1996 - 12 - 15 ஆம் திகதி

ஞாற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி.

தலைவர்: திரு. ச. செல்வரத்தினம்

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறைவணக்கம்.
2. நிகழ்ச்சி நிரல் வாசித்தல்.
3. தலைவர் உரை.
4. சென்ற வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கை வாசித்தல்.
5. ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்.
6. 1996 / 97 நிதி வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் அங்கீகாரம் பெறல்.
7. 1996 / 97 நிதி வருடத்திற்கான மொத்தக்கடன் எல்லை அங்கீகாரம் பெறல்.
8. 1993 / 94 நிதி வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கையையும், கணக்காய்வாளரின் அறிக்கையையும் சமர்ப்பித்தல்.
9. 1993 / 94 நிதி வருடத்தில் எஞ்சியிருக்கும் சுத்த இலாபத்தை ஒதுக்கீடு செய்தல்.
10. 1993 / 94 நிதி வருடத்தில் சேதாரக் கழிவு வழங்கியமைக்கு அங்கீகாரம் பெறல்.
11. (அ) இராணுவ நடவடிக்கையால் சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு விவரம் சமர்ப்பித்தல்.
    (ஆ) இராணுவ நடவடிக்கையின்போது கிளை நிலையங்களில் ஏற்பட்ட களவு - பொருட் குறைவு பதிவழித்தலுக்கு அங்கீகாரம் பெறல்.
12. வாகன திருத்த செலவீனங்களுக்கு அங்கீகாரம் பெறல்.
13. மூலதன செலவுகளுக்கு அங்கீகாரம் பெறல்.
14. சங்க வான் 27 - 2094 பாரிய திருத்த வேலைக்கான முன் அங்கீகாரம் பெறல்.
15. பிரேரணைகள் சமர்ப்பித்தல்.
16. சிறப்புரை.
17. நன்றியுரை.

பொதுச்சபைப் பிரதிநிதிகள் யாவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம். மேற்படி நிகழ்ச்சி நிரல் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுச்சபை பிரதிநிதிகள் நிகழ்ச்சி நிரலை சங்க தலைமையலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நன்றி!

ச. செல்வரத்தினம்,
தலைவர்.

ஆ. நாகராசா,
செயலாளர்.

(சி-3683)


## பெற்றோல் தாங்கிகள்

கொழும்பு, டிச. 8

யாழ்ப்பாணத்தில் பெற்றோலை களஞ்சியப்படுத்த இரு பாரிய தாங்கிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்படுகின்றன.

இன்று கொழும்பில் இருந்து வடக்கே புறப்படும் 'லங்கா முடித' கப்பலில் இந்த தாங்கிகளுடன் மற்றும் இரு பஸ்களும் எடுத்துவரப்படுகின்றன.

இந்தியா யாழ். மக்களுக்கு என்று வழங்கிய 1200 மெற்றிக் தொன் அரிசியும் இக் கப்பலில் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## விடுவிப்பு

கொழும்பு, டிச.8

களுத்துறை மகசீன் சிறைச்சாலையில் 18 மாதங்களுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டிருந்த மலையக இளைஞர்கள் 12 பேர் நாளை திங்கட்கிழமை விடுதலை செய்யப்படவிருக்கின்றனர்.

இதற்காக இவர்களை நுவரெலிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நுவரெலிய மாவட்ட நீதிபதி நேற்று முன்தினம் சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்.

(உ-3)

## வெடிகுண்டு!

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1-30 மணியளவில் நேரம் குறித்து வெடிக்கும் குண்டொன்று இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு [illegible] நடவடிக்கைத் தலைமையகச் செயலகம் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக் கடிதங்கள் ஒரு மாதகாலமாக இல்லை!

யாழ்ப்பாணம், டிச. 8

ஒரு மாதத்துக்கு மேலாக யாழ். குடாநாட்டுக்கான வெளிநாட்டுக் கடிதங்கள் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி 183 தபால் பொதிகள் கப்பலில் எடுத்து வரப்பட்டிருந்தன.

அதன் பின்னர் இதுவரை எந்த வெளிநாட்டு தபால் பொதியும் கப்பலில் எடுத்து வரப்படவில்லை.

இது குறித்து பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்திடம் கேட்ட போது கொழும்பில் உள்ள தமது திணைக்கள மேல் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டதாகவும் — ஆனால் பலன் கிட்டவில்லை என்றும் கூறினார்.

எனினும் நேற்று முன்தினம் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (செயலாக்கம்) கே. ஏ. டி. எஸ். சேனாதீரவுடன் தாம் தொடர்பு கொண்டு கேட்டபோது அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பிரதி அஞ்சல் அதிபர் நாயகங்களுக்கான கூட்டமொன்றில் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும்—

அதன்படி மாதம் 4 தடவைகள் கப்பலில் வெளிநாட்டுக் கடிதங்கள் மற்றும் பதிவுத் தபால்களை யாழ்ப்பா

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கர்ம வீரர் கனகநாயகம்

## நீத்தார் நயப்புரை

அமரர் சின்னத்தம்பி கனகநாயகம் அவர்கள் சுவாமி சுத்தானந்த பாரதியாரின் சீடர்;சிறந்த கவிஞர். உருத்திரபுரம் குருகுலத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய போது அவரது திருமணம் நடைபெற்றது. அப்போது அவர் மேலங்கி (சேட்) அணியாது வேட்டியும் தலைப்பாகையுடனுமே மாப்பிள்ளைக் கோலத்தில் தாலி கட்டினார்.

மகாத்மா காந்தியடிகளின் சிந்தனை வழி நின்று இறக்கும் வரை காலிற் செருப்பு அணியாமலே நடந்து திரிந்தார். காந்தியடிகளின் சமத்துவக் கொள்கைகளையும் வர்தா ஆச்சிரம நெறிகளையும் பின்பற்றி வந்தவர்.

முழங்காவிலில் விநாயக பாடசாலையில் அதிபராக இருந்து இளைப்பாறினார். தனது சம்பளத்தின் அரைவாசிப் பகுதியை ஏழை மக்களுக்காகவே செலவிட்டு வந்தவர். அங்கு வாழும் ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் மதுப்பழக்கத்திற்கு அடிமையாக வாழ்வதைக் கண்டித்து அவர்களைத் திருத்தியவர்.

முழங்காவில் பாடசாலையில் உள்ள கிணறு கோடை காலத்தில் நீர் வற்றிவிடும். அக்கிணற்றுக்குள் குழாய்க் கிணறு வெட்டுவதற்கு எமது உதவியை நாடி அதனைச் செய்வித்தார். அதனால் அப்பகுதி மக்கள் பயன் பெற்றுள்ளனர்,

குளம் ஆழமாக்கும் பணி, மரம் நாட்டும் பணி, பனைமர நடுகைத் திட்டம் போன்ற பல்வேறு சமூகப் பணிகட்கு எம்முடன் சேர்ந்து உழைத்தவர் அவர்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் சீடராக இருந்து அவரது பணியான சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் செயற்பாட்டில் தீவிரமாக உழைத்தார்,

பிற்காலத்தில் அவரது ஓய்வூதியத்தில் ஒரு பங்கினைத் தருமத்திற்காகச் செலவிட்டு வந்தவர். ஒரு சிறந்த கர்ம வீரனை இழந்து விட்டோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

— க. கனகராசா


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29 — 10 — 1919

மறைவு: 14 — 12 — 1990

அமரர் சபாபதிப்பிள்ளை நாகராசா

திதி: 08 - 12 - 1996

அன்பின் பிறப்பிடமே, பண்பின் இருப்பிடமே
துயரத்தால் ஆறாண்டு காலங்கள் ஓடி விட்டனவே!
இயன்றவரை யுலகம் போற்றி வாழ்ந்த அப்பாவே!
வாழ்வதற்குள் அவசரமாய் காலனவன் வந்தனனோ?

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளை, ஆறாத் துயரினில் தவிக்கவிட்டு மறைந்துவிட்ட தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

''இராஜகிரி''
பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு.

(43978)

# யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்துக!

## மட்டு. மாவட்ட ஐ.தே. கவின் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, டிச. 8

உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட்டு, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஐ.தே.கவின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான அலி சாகீர் மௌலானா நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இக் கோரிக்கையை விடுத்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

மாதம் தப்பினாலும் அவசரகாலச்சட்ட நீடிப்பு தப்பாது. தொடர்ச்சியாக நாம் அவசர காலச் சட்டத்தின் கீழேயே இந்த நாட்டை ஆண்டு வருவதையிட்டு வேதனைப்பட வேண்டும்.

வறுமையின் அடிமைகளாகவும், பயங்கரவாதத்தின் அடிமைகளாகவும் நமது நாட்டு மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களின் வாயிலும், வயிற்றிலும், காலிலும் கையிலும் பூட்டப்பட்டுள்ள இந்த அடிமை விலங்குகளை உடைத்தெறிய வேண்டும்.

விடுதலை ஒளியும், ஜனநாயகத் தென்றலும் வீசக்கூடிய வசந்தமான ஒரு வாழ்வை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

தலைவிதி என்று எண்ணி பெரும்பான்மை, சிறுபான்மை என்று நாம் போட்ட கணக்குகளால் நமது நாட்டையே துண்டாடும் போக்குக்கு இழுத்துச் சென்றுவிட்டது.

நமது மக்களை வறுமையின் விளிம்புக்குத் தள்ளி வீழ்த்தி அவர்களின் வயிற்றின் மீது ஏறி நின்று யாரை நோக்கி குறிவைத்துள்ளோம்?

நமது எதிரிகள் யார்? அவர்கள் ஏன் எதிரிகளானார்கள்? அவர்களை எதிரிகளாக உருவாக்கியது யார்? அவர்களை எவ்வளவு காலம் வரை எதிரிகளாகவே வைத்திருக்கப் போகிறோம்? எவ்வளவு காலமாக அவர்கள் எதிரிகளாகி விட்டிருக்கிறார்கள்? நமது நோக்கம் என்ன? எதிரிகளாகவே அவர்களை கடைசி மட்டும் வைத்திருந்து எதிரிகள் என்ற நாமத்துடனேயே அழித்துவிட நாம் நாட்டம்கொண்டுள்ளோமா?

இந்த நாட்டின் வரலாற்றுப் பாடங்களில் எத்தனை அத்தியாயங்கள் இளைஞர்களின் இரத்தத்தினால் எழுதப்பட்டுள்ளன?

மாதாந்த அவசரகாலச் சட்ட நீடிப்புக்கள் வருடங்களைத் தொலைத்து, தசாப்தங்களை விழுங்கிக்கொண்டிருக்கின்றன. இன்னும் கட்டிக் காப்பதற்கு எம்மிடம் என்ன இருக்கிறது?

நாம் கண்விழித்துப்பார்க்க வேண்டும்; மனம் திறந்து பேச வேண்டும்; விசுவாசத்தை முறித்துக்கொள்ளாத வகையில் செயற்படவும் வேண்டும். அதற்கு நாம் தயார்தானா? ஆறுதலாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயங்கள் இவை.

மனம் திறந்து சொன்னால் இராணுவ ரீதியில் உரிமைப் போராட்டங்களை வென்றெடுக்க முடியாது. எனவே இந்த யுத்தம் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்க வேண்டும். அதுவும் நிபந்தனையில்லாத பேச்சுக்கு அழைக்க வேண்டும்.

நியாயமான ஓர் அரசியல் தீர்வுக்காக ஆயுதப் போராட்டங்களை நிறுத்தி, ஜனநாயக வழிக்கு நீண்ட தமிழ்க் கட்சிகள் இன்று விரக்தியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வருபவர்கள் சொல்லும் பரிதாபகரமான கதைகளைக் கேட்கும் போது, அடக்கு முறையும், எதேச்சாதிகாரமும் அங்கு தலைவிரித்தாடுவதாகத் தெரிகிறது.

இந்த சூழலில் வடக்கில் ஒரு தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சி செய்கிறது.

இந்த தேர்தல் நாடகத்தின் பின்னணியில் ஏதோ சூழ்ச்சி பின்னப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் அறிக்கை கூறுகிறது.

இந்த அரசாங்கத்தை வேறுவழியின்றி நம்பிக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் சுதந்திரமானதும் நேர்மையானதுமான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை வடக்கில் நடத்துவதற்கு பொருத்தமான சூழ்நிலை அங்கு இல்லை என்றும், அவற்றில் தாம் ஈடுபடப் போவதில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் என்ற அரங்கேற்றத்தை நடத்த நீங்கள் முற்படுகிறீர்கள் ஆபினும் அதற்கு ஏற்றவாறு மேடை ஒழுங்காக — சீராக — அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்த்துச் செயலாற்றுங்கள் என்றார்.

# வெள்ளரசு மரத்தை பாதுகாக்க அரண்!

கொழும்பு டிச. 8

அநுராதபுரம் வெள்ளரசு மரத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரணை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த வைபவத்தில் இராணுவத்தளபதி றோகான் தலுவத்த, கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரா, விமானப்படைத்தளபதி ஒலிவர் ரணசிங்க, பொலீஸ்மா அதிபர் ராஜகுரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பாதுகாப்பு அரண் 10 சோதனை நிலையங்கள் மற்றும் 37பங்கர்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

## ஸ்ரீமனியின் ஆலோசனை

சுற்றாடல் மாசடைவதை தடுக்கும் நடவடிக்கையாக மீளப் புதுப்பிக்கப்பட்ட (Re-condition) வாகனங்கள் இறக்குமதி செய்வதை தடை செய்யுமாறு அரசாங்கத்திற்கு தாம் யோசனை கூறப்போவதாக அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியத்தை தெளிவுபடுத்திய ஆய்வாளர் கைலாசபதி

மலேசியாவிலே கருவாகி ஈழத்திலே உருவாகி நவீன தமிழிலக்கிய உலகிலே தனக்கென ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றவர் பேராசிரியர் க. கைலாசபதி.

நவீன தமிழிலக்கியத்தை ஆரம்ப நிலையில் கற்கப் புகுபவர்கள் கூட, கைலாசபதி பற்றி அறியாமல் இருக்க நியாயமில்லை. அவ்வளவு தூரம் நவீன தமிழிலக்கியத்தை நெறிப்படுத்திய புகழ்பூத்த விமர்சகராக பேராசிரியர் கைலாசபதி விளங்கியுள்ளார்.

1933 இல் கோலாலம்பூரில் பிறந்த கைலாசபதி யாழ்ப்பாணத்திலே இடைநிலைக்கல்வியையும், கொழும்பு றோயல் கல்லூரியிலே உயர்தரக் கல்வியையும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ச் சிறப்புக் கல்வியையும் பெற்றவர். அக்காலத்திலே, இலங்கைப் பொதுவுடைமைக்கட்சியின் முன்னோடிகளில் ஒருவரான மு. கார்த்திகேசன் அவர்களின் பொதுவுடைமைத் தத்துவத்தால் ஈர்க்கப்பட்டவர். மார்க்சிச அறிஞரான பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சனின் வழிகாட்டலால் ஆய்வுப் புலத்திலே தடம் பதித்தவர். பல புதிய இலக்கிய விமர்சன முறைகளைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர். தினகரன் பத்திரிகை ஊடாக பல படைப்பாளிகளை தமிழ்இலக்கிய உலகுக்கு இனங்காட்டி வைத்தவர். இளம் ஆய்வாளர்களைத் தட்டிக் கொடுத்தவர். பலநூறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், அரியபல விமர்சன நூல்களையும் தமிழுக்குத் தந்தவர். தமிழகத்து அறிஞர்களுக்கும் தமிழிலக்கியத்திலே வழிகாட்டி வைத்தவர் இன்றைய விமர்சகர்களுக்கு ஆதர்சமாக விளங்குபவர்.

பேராசிரியர் கைலாசபதி பல்கலைக்கழகங்களிலே தமிழ் பயில்கின்ற மாணவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டி; தினகரனுக்குக் கிடைத்த சிறந்த பத்திரிகையாசிரியர்; எழுத்தாளர்களுக்கு கிடைத்த உற்ற நண்பன்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெற்ற சிறந்த நிர்வாகி.

**பொ. கமலரூபன்**

கைலாசபதியின் பணிகளிலே, ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அவர் அளித்த ஊக்கமும், கல்வித் துறையுமே அவர் செய்த பங்களிப்புக்கள் பற்றியும் அதிகம் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. பல புனை பெயர்களில் அரசியல் கட்டுரைகள் எழுதியுள்ள போதும், அவை அவரை ஓர் அரசியல்வாதியாக் அறிய வைக்காத நிலையில் கைலாசபதி என்ற அரசியல் வாதியிலும், கைலாசபதி என்ற விமர்சகர்தான் அதிகம் கவனிப்புக்குரியவரானார்.

### அடக்கு முறைக்கு எதிரானவர்

கைலாசபதி, கலை கலைக்காகவே என்ற சமுதாயம் சாராத அழகியற் கோட்பாட்டினையும், மரபுவழி அழகியற் கோட்பாடுகளையும் தனது பல்துறை சார்ந்த பார்வைப் பண்பு கொண்ட விமர்சன முறையினாலே வெற்றிகரமாக எதிர்த்தார். சமூக அடக்கு முறைக்கு எதிரான போராட்டங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு, அடக்கு முறைக்கு எதிரான முற்போக்கு அணியினருடன் மிக நெருக்கமான நட்புக் கொண்டிருந்தவர். அரசியல், சமூகம் என்பவற்றிலே மிகுந்த அக்கறை கொண்டிருந்த கைலாசபதி, கலையை கலைக்கென்று இல்லாமல் கலையை சமூகத்தோடு சேர்த்துப் பார்த்து விமர்சித்தவர். தொலைநோக்கு உணர்வு கொண்ட இவர் சமதர்ம சமுதாயம் ஒன்றினை இலங்கையில் உருவாக்கும் நீண்ட காலக் கனவுடன் செயற்பட்டவர்.

சமூகப் பொறுப்புணர்வுடன் இலக்கிய உலகில் நடமாடியவர். இலக்கியத்தின் மூலமாக நவீனஉலகு ஒன்றை உருவாக்க முடியும் என்று கைலாசபதி நம்பியிருந்தார். இதை இவரது 'ஒரே உலகம்' கிருதயுகமும் கேடில்லா வாழ்வும்;' 'நவீன உலகும் இலக்கிய உணர்வும்' ஆகிய கட்டுரைகள் காட்டுகின்றன. இதனாலேயே கிருதயுகக் கவிஞன் பாரதியையும் கண்டுணர்ந்து பல்வேறு விதங்களில் இனம் காட்டினார். அனைத்துக் கலை பற்றிய ஆய்வுகளும், செயற்பாடுகளும் உன்னதமான மானிட சமுதாயத்தை உருவாக்கும் என நம்பினார்; அதற்காகவே முயன்றார்.

'கைலாஸ்' என எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்ட இவர் பெயருக்கு ஏற்பவே (கைலாயம்) ஆகவே விளங்கினார். இன்னொரு புகழ் பெற்ற விமர்சகரான பேராசிரியர் சிவத்தம்பி கூறுவது போல, ''சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை தமிழிலக்கியப் பாரம்பரியத்தின் சமூக-இலக்கியப் பின்னணியைத் தெளிவு படுத்திய ஆய்வுத் துறையில் கைலாசபதியின் பணி மிகச் சிறந்ததாகும்''.

ஈழத்துத் தமிழிலக்கியம், ஒப்பியல் இலக்கியம், இலக்கியத் திறனாய்வை சமூக மார்க்சிய ரீதியாக நோக்குதல், ஆகிய கருத்து உருவாக்கங்களுக்குப் பின்னணியாக நின்றவர். 1982ஆவது வருடம் மார்கழி மாதம் ஆறாம் திகதி தமிழிலக்கிய உலகம் கண்ணீர் பனிக்க தமது ஊனுடலைத் துறந்தார். ஆபினும் கைலாசபதி என்ற நாமம் தமிழிலக்கியம் உள்ளளவும் நின்று நிலைபெறும். ★

## வடபகுதியில் . . .

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ பொன்னையா சத்தியநாதன்— புலோலி தெற்கு, புலோலி.

★ இளைய பெருமாள் பத்மநாதன்— வட்டக்கச்சி, கிளிநொச்சி.

★ கதிர்காமத்தம்பி ஜெயபாலன் — பலாலி தெற்கு, வயாவிளான்.

★ அருணாசலம் சுவேந்திரன் (மோகன்) — அளவெட்டி.

★ அமிர்தநாதன் இனோசியஸ் — கணேசபுரம், கிளிநொச்சி.

★ ஐயாக்குட்டி தங்கேஸ்வரன் —நாவற்காடு, வரணி, கொடிகாமம்.

★ ராமு இரத்தினம் (ராமு) — புத்தூர் கிழக்கு, புத்தூர்.

★ செல்லத்தம்பி தட்சணாமூர்த்தி — மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ இரத்தினசபாபதி மோகனதாஸ் (கட்டை மோகன்) — 45, வைத்திய சாலை வீதி, யாழ்ப்பாணம்.

★ நந்தகோபால் ஜீவன் (வாகீசன்) — உதயா ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

★ செபஸ்தியன் மஸ்கிரின்ரு — இல. 4, பேசாலை, மன்னார்.

★ இராஜரட்ணம் ஜீவகுமார் — சூரியா தோட்டம், வல்வெட்டித்துறை.

★ குமாரசாமி ஜெகவீரன் (தேவர்) — இரணமடு, 268, கிளிநொச்சி,

★ கந்தையா அருந்தவநாதன் (அருண்)— நவாலி வடக்கு, மானிப்பாய்.

★ பத்மநாதன் பெனடிக் பத்மகுமார் — அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ முனியாண்டி பெருமாள் ரமேஷ்— ஆனைவிழுந்தான் குளம், கிளிநொச்சி.

★ அமிர்தநாதன் சில்வெஸ்டர்— சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.

★ கந்தசாமி நாகராஜா— ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.

★ நவரட்ணராஜா பொபிராஜ் — புதியகுளம், கீரிமலை, காங்கேசன்துறை.

★ விஸ்வநாதன் யோகலிங்கம் — கரணவாய் தெற்கு, கரணவாய்.

★ சங்கரப்பிள்ளை சுரேஸ் — மட்டுவில் கிழக்கு, மட்டுவில்.

★ வடிவேல் நடேசன் — கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ பரமசாமி சிவபாலன்— கோப்பாய் வடக்கு.

★ தம்பிராசா செல்வேந்திரன் — கோயிலடி, கைதடி.

★ அழகேந்திரராசா பகீரதன் — நாவற்குழி வடக்கு, கைதடி.

★ கிருஷ்ணன் சந்திரகுமார் — அல்வாய் தெற்கு, அல்வாய்.

★ இராசரத்தினம் இரவீந்திரராஜா — ஊரெழு, சுன்னாகம்.

★ மேரி ஜோசப் அமலதாசன் — நாவற்குழி, கேரதீவு வீதி, கைதடி.

★ இரத்தினம் செல்வகுமார் — தச்சன்தோப்பு, கைதடி.

★ திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் — தனங்கிளப்பு, சாவகச்சேரி.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுக் . . .

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்ததாகவும் பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். குடாநாட்டிலிருந்து விமானத்தில் தபால் பொதிகள் எடுத்துச் செல்வதும் எடுத்து வருவதும் சீராக ஒவ்வொரு கிழமையும் நடைபெறுகிறது.

வாராந்தம் இவ்வாறு எடை குறைந்த அத்தியாவசிய உள்ளூர்க் கடிதங்கள் தபால்பொதிகளில் விமானம் மூலம் வருவது குறிப்பிடத்தக்கது. [இ-4-117]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எமது சங்கத்தில் பாவிக்கப்பட்ட லொறி பற்றறிகள், பாவிக்கப்பட்ட லொறி ரயர், ரியூப் ஆகியன விற்பனைக்குள்ளன. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும். பொது முகாமையாளர், அளவெட்டி —மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அளவெட்டி.

(சி/ 3695)

### "கைலேஞ்சி"

மில்க்வைற் சலவைப்பவுடர் 450 கிராம் வெற்றுப் பெட்டிகள் 10 கொடுத்து உள்ளூர் கைத்தறியிலான கைலேஞ்சி ஒன்றினைப் பெற்றுக் கொள்ளவும். உள்ளூர்க் கைத்தொழிலை ஆதரியுங்கள். ''மில்க்வைற்''

(சி/3691)

### காணவில்லை

கறுப்பு, பிறவுண் நிறத்தைச் சேர்ந்த அல்சேசன் நாயைக் காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 639/1, நாவலர் வீதி, நல்லூர். (43995)

### MATHS 97

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், 31 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (43994)

### நங்கை

மகளிர் அபிவிருத்தி நிலையம் வெளியிடும் 'நங்கை' இதழ் 12 வெளிவந்துள்ளது. விலை 15/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (44002)

### நூல்

'அகிலம்' வெளியீடாக இரா. சிவசந்திரன் எழுதிய, ''தமிழர் பாரம்பரியப் பிரதேசம்; விவசாய வளமும் பயன்பாடும்'' எனும் ஆய்வு நூல் வெளிவந்துள்ளது. விலை 60/–, கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(44003)

### வினா விடை

G.C.E. O/L மாணவர்களுக்கான கடந்த கால சித்திர பாட வினா விடைத் தொகுப்பு. எஸ். இராமச்சந்திரன், வெளியீடு - ரலன்ற் இன்ஸ்ரிரியூட். கிடைக்குமிடம்: தமிழ்ப்பூங்கா புத்தகசாலை, நெல்லியடி. விலை ரூபா 35/–. (43944)

### றோணியோ

சிறந்த முறையில் தமிழ், ஆங்கில, தட்டச்சு வேலைகள், றோணியோ வேலைகள் செய்து பெற்றுக்கொள்ள 25, றக்கா றோட். (புனித ஜோண் பொஸ்கோ முன்பாக) (44008)

### வீடுகள் வாடகைக்கு

கல்வியங்காடு வாசிகசாலை ஒழுங்கையில் இரண்டு வீடுகள் வாடகைக்கு உள்ளன. தொடர்பு:- சகாதேவன், இல. 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (43965)

### மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த A/L படித்த 35 வயது, அச்சுவினி, 8 இல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. சாதக குறிப்பு, விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இல;– 562 மே/பா உதயன் பணிமனை யாழ்ப்பாணம். (43892)

## ஒய்வூதிய வவுச்சர்

நான்கு பிரதேச செயலகங்களின் பகுதிகளைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் தவிர்ந்த ஏனைய யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

(அ-100)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| ஜனனம்: | | மரணம்: |
|---|---|---|
| 15 — 05 — 1902 |  | 20 — 11 — 1995 |

### கந்தையா இலட்சுமிப்பிள்ளை

திதி: **08 - 12 - 1996**

பாரில் எம்மிருவரையும் ஈன்றெடுத்து
பட்டம் பதவியெல்லாம் பெற்றுத்தந்து
பரிதவிக்க எம்மை விட்டு அம்மா
பறந்தோடிச் சென்றதெங்கே நீங்கள்?

ஆத்மா சாந்தியடைய வழிபடுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்:
மக்கள், மருமக்கள், பேறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

புலோலி மேற்கு,
புலோலி.

(44010)

## வரவேற்கின்றோம்

எமது கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கல்வி மேம்பாட்டுக்காகவும், கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், விளையாட்டுத்துறை முன்னேற்றத்திற்காகவும் அரும்பணியாற்றப் பொறுப்பேற்றிருக்கும்

அதிபர்
**திரு. க. இராசதுரை** B.Ed. (Hons)Cey.
B. A. (Pol. Sc. ) — PGDEM

அவர்களைஇதயபூர்வமாக வரவேற்று இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி -
பழைய மாணவர் சங்கம்.

## வாழ்த்துகின்றோம்

மத்திய அன்னையில் 23 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக, மைந்தர்களின் கல்வி வளர்ச்சிக்கும், விளையாட்டுத்துறை முன்னேற்றத்திற்கும் அரும்பணியாற்றிய

**லெப்டினன்ட் ரீ. நாகரெட்ணம்**

பிரதி அதிபர் அவர்கள் தொடர்ந்தும் வெள்ளிவிழாக் காண சேவையாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி -
பழைய மாணவர் சங்கம்.

## நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரியில் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் ஆசிரியையாக அருந்தொண்டாற்றியும், பழைய மாணவர் சங்கத்திற்கு பேருதவியும் புரிந்த

**திருமதி இன்பமணி மதியாபரணம்**

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் துணைவர்

**அமரர் ஏ. மதியாபரணம்**

அவர்களின் சேவையினையும் நினைவு கூர்ந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி -
பழைய மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி- 3666)

## பாராட்டுகின்றோம்

கால் நூற்றாண்டு காலம் கல்விச் சேவையில்பணியாற்றி
வெள்ளிவிழாக் காணும்

ஆசிரியர்
**திரு. எஸ். பாலசுப்பிரமணியம்**
அவர்களோடு,

துணை ஆளணியினர்
**திரு. எஸ். பரமநாதன்**
**திரு. எஸ். வீரசிங்கம்**
ஆகியோரையும்,
அவர்களது சேவைகளைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி-
பழைய மாணவர் சங்கம்.

(C/3667)

சுன்னாகம்
## பல நோ. கூ. சங்கம்
(வ-து) சுன்னாகம்.

## வெற்றுச்சாக்கு விற்பனை அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 13,000- க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. கேள்விப் பத்திரங்களை சங்கவேலை நாள்களில் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூ. 100/– செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் **16 - 12 - 96** வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
06 - 12 - 96

(சி/3692)

## MODERN EDUCATION CENTRE

NELLIADY, KARAVEDDY.

**A/L** வகுப்பிற்கான பகல் நேர
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான
மீட்டல் வகுப்புகள்
ஆரம்பமாகி விட்டன.

| | |
|---|---|
| கணக்கியல்:- | திரு. பவான் |
| வர்த்தகம்:- | திரு. முகுந்தன் |
| பொருளியல்:. | திரு. ஸ்ரீரங்கநாதன். |
| தமிழ்;- | திரு. நடராஜா. |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | திரு. ஜோதீஸ்வரன். |
| அளவையியல்:- | திரு. நவம். |

**A/L98 கலை, வர்த்தக புதிய பிரிவுகளும் ஆரம்பமாகி விட்டன.**

(சி– 3684)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில்: | | விண்ணில்: |
|---|---|---|
| 16 — 04 — 1955 |  | 10 — 09 — 1996 |

### ஸ்ரீகரன் (ஸ்ரீ)

மாதங்கள் மூன்று ஆயிடினும் எமக்கு
மாறு மோவுன் மனக்கவலை! நாமெல்லாம்
தேறு தல்பெறத் தெரியாது அழுகிறோம்.
பேறு றஆத்மசாந்திக் கருள்வன் மாயுன்.

சிவபாதசுந்தரம் குடும்பத்தினர்.

நாவற்குழி,
கைதடி.

(9038)

# உதயன்

## தாய் தந்தை பேண்!

இந்தியாவின் ஹிமாசல் பிரதேஷில் (இமாலயப் பிரதேசத்தில்) வழமைக்குப் புதுமையான சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

பிள்ளைகள் தமது வயதான பெற்றோரைத் தங்களோடு வைத்துப் பராமரிக்க வேண்டும்; இல்லையேல் அவர்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த மாதம் தோறும் பணம் வழங்க வேண்டும். இதுவே அந்தப் புதிய சட்டம்.

சமூக மரபுகளுக்கும், மனித மாண்புகளுக்கும், உயர்ந்த விழுமியங்களுக்கும், ஆன்மீகச் செறிவுக்கும் உதாரணம் காட்டப்படும் பரத கண்டத்திலேயே அவை சிதைவுற்றுப் போகின்றன என்பதனையே புதிய சட்டம் புலப்படுத்துகின்றது.

இந்திய நாட்டில் எழுந்த மகாபாரதம், இராமாயணம் போன்ற பெரும் இதிகாசங்களும் ஏனைய இலக்கியங்களும் பெற்றோரைத் தெய்வமாக மதித்து வணங்கவும், போற்றவும், பேணவும் அன்றைய இந்திய மக்கள் தங்களையே தியாகம் செய்தார்கள் என்ற பலப்பல செய்திகளைச் சொல்லி நிற்கின்றன.

ஆனால் இன்று அந்த நிலை இல்லை என்பது, இந்தியாவுக்கு மட்டுமன்றி எமது நாட்டுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் பொருந்தும்.

தமது பெற்றோர்களை அவர்களின் முதுமைப் பருவத்தில் தம்முடன் வைத்திருந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் மரபு தென்னிலங்கையில் பெரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருவதாக அண்மைக்கால மதிப்பீடுகள் வெளிப்படுத்துகின்றன.

தாய் தந்தையரை அவர்களின் கடைசிக் காலம் வரை வைத்துப் பேணிப் பாதுகாத்து பராமரிக்கும் மரபு இன்னும் பெரிய அளவில் தமிழர் சமூகத்தில் குன்றிவிடவில்லை. அன்னையையும் தந்தையையும் அவர்களது முதுமைப் பருவத்தில் பராமரிக்குமாறு சட்டம் போட்டு நிர்ப்பந்திக்க வேண்டிய கட்டம் இன்னும் வரவில்லை.

எனினும், தமிழர்களில் கணிசமானோர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டதால், பல பெற்றோர்கள் எவ்வளவு பணமிருந்த போதிலும், உறவுகளைப் பிரிந்து மன வேதனையும், உடல் நலிவும் அடைவது சர்வ சாதாரணமாகி விட்டது. சில பெற்றோர்களின் இறுதிக் கிரியைகளை மற்றவர்களே செய்வது, வெளியார் கொள்ளி வைப்பது போன்ற சம்பவங்களும் மலிந்துவிட்டன.

இத்தகைய குறைகளைத் தவிர்ப்பதற்காக, வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகள் பெற்றோர்களைத் தம்மோடு அழைத்தாலும், அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க முடிவதில்லை. ஊரைவிட்டு ஏன் வந்தோம் என்று தொலைதேசங்களில் போயிருந்து ஏங்கும் பெற்றோரே அதிகம்!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற முந்திய உயர்நிலையும், மாதாவை (பெற்றோரை) ஒரு நாளும் மறக்க வேண்டாம் என்ற வழிகாட்டுதல்களும் மறைந்து போகாமல் தடுக்க வேண்டிய சமூக நெறிகள் எமக்கும் தேவைப்படுகின்றன.

# தேர்தலில் தமிழ்க் கட்சிகளை பங்குபற்ற கோருகிறார் ரத்வத்தை

கொழும்பு, டிச. 8

''வடக்கில் இராணுவம் நிலைகொண்டு சிவில் நிர்வாகத்தை நடத்த முடியாது. ஆகவே தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு, சிவில் நிர்வாகத்தை கொண்டு வர முனையவேண்டும்.''

—இப்படி கோரிக்கை விடுத்துள்ளார் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை.

நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை வடக்கில் நடத்த வேண்டும்சிவில்நிர்வாகத்தை கொண்டு வர அதுவே தகுந்த வழிமுறையாகும்.

அங்குள்ள படித்த இளைஞர்களும், கல்விமான்களும் தேர்தலில் போட்டியிட வேண்டும். அத்தேர்தலில் வெற்றிபெறுபவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பது தான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

எனவே எமது கோரிக்கைகளை ஏற்றுச் செயற்பட தமிழ்க்கட்சி முன்வர வேண்டும் —என்றார். (உ-3)

## வாழ்க்கை செலவு சுட்டெண்

யாழ்ப்பாணம், டிச. 8

நவம்பர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 2004.7 என தொகை மதிப்பு புள்ளி விவர மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ். சங்கரப்பிள்ளை அறிவித்துள்ளார். (இ-152)

## அங்கத்தவர் பட்டியல்

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகளின் சங்க அங்கத்தவர்கள் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலைப் பரிசீலித்து அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

அடுத்த பட்டியல் இம்மாதம் 31 ஆம் திகதி பூரணப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-15)

## மா தாராளமாக கிடைக்கும்

யாழ்ப்பாணம், டிச. 8

மக்களுக்குத் தேவையான மாவை கட்டுப்பாடற்ற முறையில் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிப்பதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே ப. நோ. கூ. சங்கங்கள் விநியோகத்துக்கு வேண்டிய மாவுக்கான வழங்கற் கட்டளைகளை தாமதமின்றி உணவுக் கட்டுப்பாட்டுக் கிளையில் பெற்று, பொது மக்களுக்குத் தேவையான மாவை விநியோகிக்கும்படி உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திருமதி. வி. கேதீஸ்வரன் கோரி உள்ளார். (இ)

## 3 பயணிகள் கப்பல்கள்

திருகோணமலை, டிச. 8

திருகோணமலையில் இருந்து மூன்று பயணிகள் கப்பல்கள் இன்று வடக்கு நோக்கிப் புறப்படவிருப்பதாகத் திருகோணமலைத் தகவல்கள் தெரிவித்தன. (இ-3-150)

## சுயேச்சைக் குழு ஒன்று வடக்கில் போட்டியிடுவதற்கு முயற்சி?

கொழும்பு, டிச. 8

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் சுயேச்சைக் குழு ஒன்று போட்டியிட முயற்சி செய்வதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் திணைக்களத்தில் நடந்த பாதுகாப்பு தொடர்பான மாநாட்டிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் கூட்டாக இரு அரசியல் கட்சிகள் போட்டியிட இருப்பதாகவும் அம்மாநாட்டில்தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் 2 ஆயிரம் பொலீஸாரே பணியாற்றுவதால் தேர்தலுக்காக மேலும் 2 ஆயிரம் பொலீஸார் அங்கு அனுப்பப்பட இருப்பதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பண்பாகும் அன்பு

மார்ட்டீன் புரூம்மா என்னும் ஆங்கில அறிஞர், ஆசிரியர்களின் பண்பு என்பது பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

அதில் ஓர் ஆசிரியை பற்றி அவர் கூறுகிறார்.

அந்த ஆசிரியை பைன் மரக்காட்டில் வெகு தூரத்திலிருந்த ஒரு கிராமத்தில் பாடசாலை ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார். அந்தப் பாடசாலைக்குக் கதவும் கிடையாது, ஜன்னலும் கிடையாது. மாணவர்கள் மரக்கட்டையின் மீதே உட்கார்ந்தார்கள். ஆசிரியைக்கு நாற்காலி கிடையாது. குளிர் காலத்தில் உஷ்ணம் உண்டாக்க கணகணப்பு அடுப்பும் கிடையாது. பெப்ரவரி மாதம் ஒருநாள் பெரும் புயல் காற்று அடித்தது. தாங்க முடியாத குளிராயிருந்தது. ஆனால் அந்த அம்மையார் ஒரு நிமிடமும் தயங்கி நிற்காமல் குழந்தைகளின் மீது காற்றுப் படாமலிருப்பதற்காக வாசலில் போய் குழந்தைகளைப் பார்த்துத் திரும்பிக் கொண்டு நின்றார்.

ஆனால் அவருடைய அன்பே அவருடைய உயிருக்கு உலை வைத்து விட்டது. கடும் காய்ச்சல் ஏற்பட்டு ஒரு வாரத்துக்குள் இறந்து போனார். மனிதர் செய்யக்கூடிய அன்பு இதை விடப் பெரிதாக எதுவும் கிடையாது. குழந்தைகள் எல்லாம் அவருடைய கல்லறையின் மீது ரோஜா மலர்களைப் பரப்பி வைத்தார்கள்.

தொகுப்பு: க. கனகராசா

# ஆண்டவருடைய வருகைக்காக உங்களை ஆயத்தப்படுத்துங்கள்

இஸ்ராயேல் மக்கள் பல நூற்றாண்டு காலமாக மீட்பர் ஒருவரை எதிர்பார்த்திருந்தார்கள். அதன்படியே, காலம் நிறைவுற்றபோது கடவுளும் மனித வடிவம் பூண்டு வருவதை நாம் வரலாற்றில் கண்டோம். அதனையே நாம் இன்றும் வருடம்தோறும் நினைவு கூர்ந்து 'கிறிஸ்து பிறப்பு' என்று கொண்டாடுகின்றோம்.

இன்றைய நாள்கள், கிறிஸ்துவினுடைய வருகைக்காக நம்மை நாமேதயார்ப்படுத்துகின்ற, ஆயத்தம் செய்கின்ற நாள்களாக அமைகின்றன. ஆகவே இன்றைய நாள்களில் ஆண்டவன் தருகின்ற செய்திக்கு செவிமடுப்பது பொருத்தமானதாகும்.

''ஆயத்தமாயிருங்கள்; நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்'' (மத். 24:44) என்பதாகும். இதனை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் விழிப்புடனும், விவேகத்துடனும் செயற்படவேண்டும். எம்மை நாமே தயார்ப்படுத்துவோம். எம்முடைய சமுதாய வாழ்விலே மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் போது அயலவர்களை அன்புடன் நோக்குவோம்; பகைவர்களை மன்னித்து வாழ்வோம்; ஏழைகளுக்கு இயன்றளவு உதவி செய்வோம்; எம்முடைய முன் மாதிரிகையான வாழ்வினால் மற்றவர்க்கு சான்று பகர்வோம். அப்போதுதான் பிறக்கப் போகின்ற பாலகன் எம் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் இல்லங்களிலும் பிறப்பார்.

புனித சின்னப்பர் கூறுவது போல, ''களியாட்டம், குடிவெறி, காமம், ஒழுக்கக் கேடு, சண்டை, பொறாமை இவற்றை எல்லாம் தவிர்த்து ஆண்டவராகிய இயேசுவை அணிந்து கொள்ளுங்கள்'' என்பதற்கு இணங்க நாம் செயற்படுவோமாக.

அதற்கு உண்மையான மனமாற்றம் அவசியமானதாகும். நாம் என்றும் எம் தலைவன் இறைவனே என்றிருத்தல் அவசியம். வெளி ஆடம்பரங்கள் பகட்டான வாழ்க்கை, உலக ஆசைகளில் எமது நேரத்தினைச் செலவிடாமல் உண்மையான ஆன்மீகரீதியான விடுதலை எமக்குத் தேவை. எமது சொல்லிலும், செயல்களிலும் பிரமாணிக்கம் உள்ளவர்களாகத் திகழுதல் அவசியமாகும். உலகின் மத்தியில் ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக செயற்பட்டு, கிறிஸ்துவுக்கு எங்கெல்லாம் உரிமை உண்டோ அங்கெல்லாம் கடவுளின் உண்மைச் சீடனாகத் திகழுதல் வேண்டும். அப்போதுதான் கிறிஸ்துவின் வருகை எம்மத்தியில் அர்த்தமுள்ள முறையில் திகழும்.

''குருவிக்கு தன் தலைமேல் கூரை இல்லை; நாளைய உணவைப்பற்றிய கவலையும் இல்லை; எல்லாம் பகவான் பார்த்துக் கொள்வார்'' என்ற காந்தி அடிகளாரின் கூற்றுடன் நாம் அனைவரும் இறைவனை மையமாகக் கொண்டு எமது வாழ்வை மாற்றிபுது மனிதர்களாக புது உலகம் படைப்போமாக.

—சகோ. அ. எ. றிச்சேட்

## ஞாயிறு நற்பிரசாதம்

## நாளை

**கார்த்திகை 24**

**திங்கட்கிழமை**

**திதி:** சதுர்த்தசி பின்இரவு 12.28 வரை.

**நட்சத்திரம்:** விசாகம் முற்பகல் 9.01 வரை.

**ராகுகாலம்:** 7.49 - 9.19

சுபநேரம் : 12.19 - 1.49

[illegible] பழைய நேரப்படி)

## வடபகுதியில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ குலம் குலராசா(ராஜா) — நாவற்குழி தெற்கு, பாடசாலை ஒழுங்கை, கைதடி.

★ அருணாசலம் அருணகிரிநாதன் — மரதன்குளம், சாவகச்சேரி.

★ பேரம்பலம் ஜெயச்சந்திரன் — திருநெல்வேலி அம்மன் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

★ கந்தையா ஜெகதீஸ்வரன் — கலாசாலை வீதி, திருநெல்வேலி.

★ வீரசிங்கம் ஜெயகுமார் — அராலி, கோட்டைக்காடு, வட்டுக்கோட்டை.

★ கந்தையா சசிகுமார் — சாவகச்சேரி.

★ பாலசிங்கம் பாலமேனன் — கைதடி.

★ சிவஞானம் சசிகரன் — நாவற்குழி, கைதடி.

★ சபாரத்தினம் மோகன் — கைதடி.

★ இராம நாதபிள்ளை கண்ணதாசன் — நாவற்குழி தெற்கு, கைதடி.

★ ஜெகராசா நகுலேஸ்வரன் — நாவற்குழி.

★ கதிரமலை ரவீந்திரன் — நாவற்குழி தெற்கு, நாவற்குழி.

★ தனபாலன் சுப்பிரமணியம் — கோப்பாய் மத்தி, கோப்பாய்.

★ இராசநாயகம் கருணாகரன் — நாவற்குழி, கைதடி.

★ நல்லதம்பி ரவிச்சந்திரன் — நாவற்குழி கிழக்கு.

★ இரத்தினம் குகேந்திரன் — நாகேந்திரபுரம், புளியம் பொக்கனை.

★ நடராசா லோகசிங்கம் — நாவற்குழி தெற்கு, கைதடி.

★ குலரட்ணம் சற்குணம் — நாவற்குழி தெற்கு, கைதடி.

★ தருமராசா சுரேஷ் — பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

★ சாமுவேல் ஐயாத்துரை — புதிய சந்தை கோப்பாய்.

★ இராசதுரை கிருபானந்தன் — துர்க்கையம்மன் கோயிலடி, கோப்பாய் தெற்கு.

★ பொன்னுத்துரை நந்தசுதன் — பூதர் மடம் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ செல்லையா விஜயகுமார் —கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ இராஜரட்ணம் பார்த்திபன் (தீபன்) — நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ பத்மநாதன் ஸ்ரீதரன் — ஏழு கோயிலடி, ஏழாலை மத்தி, ஏழாலை.

★ நாகராசா பிரபாகரன் — பாடசாலை ஒழுங்கை, கோப்பாய்

★ இராசதுரை ஜெயபிரகாஷ் — பூதர்மடம், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ பஞ்சலிங்கம் நிரஞ்சன் — உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ சிவஞானம் ஜெயகாந்தன் — நாவற்குழி தெற்கு, நாவற்குழி, கைதடி.

★ அந்தோனி மரியசீலன் — தேவாலய வீதி, குப்பிளான் வடக்கு, குப்பிளான்.

★ சண்முகசுந்தரம் சிவசுந்தரம் — கைதடி தெற்கு, கைதடி.

★ பொன்னர் லங்காதரன் — தாசன் ஸ்ரூடியோ, கே. கே. எஸ். வீதி, இணுவில்.

★ இராசலிங்கம் சிவகாந்தனி — முத்துமாரியம்மன் கோயிலடி, மட்டுவில் வடக்கு.

★ முருகேசு மயில்வாகனம் — சிந்துவெளி, காரைநகர்.

★ நல்லையா உதயன் — அம்பலவன் பொக்கணை, முல்லைத்தீவு

★ இராமசாமி கைலைநாதன் — அலம்பில், முல்லைத்தீவு.

★ சுப்பையா அரசரத்தினம் — மா இரம்பைக்குளம், வவுனியா. (அ 3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய - தென் ஆபிரிக்க அணிகள் இன்று மோதும்

கோன்பூர், டிச. 8

இந்திய, தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையேயான மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று கோன்பூரில் ஆரம்பமாகிறது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

இந்திய அணியில் தமிழ் நாட்டு வீரர் டபிள்யு. பி. ராமன் சேர்க்கப்பட்டுள்ளார். ஆட்டம் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

(இ-10)

## நாவலர் நினைவு நாள்

யாழ்ப்பாணம், டிச. 8

கோப்பாய் வடக்கு இந்து இளைஞர் மன்றத்தினர் இன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தின விழாவை நடத்துகின்றனர்.

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமான் ஆலயத்தில் இன்று காலை 8.00 மணி முதல் 9.30 மணி வரை சிரமதானம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அங்கு நாவலர் நினைவு நாள் நிகழ்ச்சிகள் இடம்பெறும். (அ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் விசேட சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள சங்க தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தொழில்சார் விடயம் பற்றிக்கலந்துரையாடப்படும் என தெரிவிக்கப்பட்டது.

(உ-4)

20 வருடங்களுக்கு மேலாக கல்விப் பணியாற்றி வரும் சிறப்புமிகு நிறுவனம்

யூனிவேர்சல்

கந்தர்மடம்.

97 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய வகுப்புகள்

ஆண்டு 4 முதல் 11 வரை. ஆரம்பம்:

நாளை (9-12-96) திங்கள் மாலை 3.00 மணி

எமது தரம் மிகுந்த ஆசிரியகுழுவின் வழி காட்டலை நாடுங்கள்!

அனுமதியை முன்னதாகவே உறுதி செய்து கொள்ளுங்கள்!

மாதம் தோறும் மதிப்பீட்டுப் பரீட்சைகளும், தவணைப் பரீட்சைகளும் நடைபெறும்.

(44015)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## புவனேஸ்வரி அம்பலவாணர்

(லிகிதர், சுகாதாரப் பகுதி - யாழ். மாநகரசபை)

ஓட்டுமடம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர் 7-11-96 அன்று விசுவமடுவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை அம்பலவாணர் (மண்டைதீவு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், அறிவரசன் (இறுதிவருட கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7-11-96 இல் விசுவமடுவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. அறிவரசன்
(பெறாமகன்)

இல 48, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(44014)

## நாகன் சின்னத்தம்பி (சீமான்)

(திருமணத் தரகர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் யா/நல்லூர் கொண்டலடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் சின்னத்தம்பி 07-12-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் நாகேஸ்வரி (பேபி), கமலராணி, குசலகுமார் (சந்திரன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-12-96 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மா. மகேந்திரம்
(மருமகன்)

கொண்டலடி வீதி,
நல்லூர்.

(44016)

## அமைச்சர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் குறித்துச் சொல்லப்படுவதாவது:-

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் றோஹான் தளுவத்த, பொலீஸ் மா அதிபர் ராஜகுரு உட்பட மற்றும் பல அதிகாரிகளை ஏற்றிக் கொண்டு பெல் - 212 மற்றும் பெல் - 412 ஹெலிக் கொப்டர்கள் பம்பலப்பிட்டி பொலீஸ் மைதானத்திலிருந்து நேற்றுக் காலை மணலாறு இராணுவ முகாமை நோக்கிப் பறந்தன.

### காணாமற் போயிற்று

பெல் - 212 ரக ஹெலி மணலாறு இராணுவ முகாமைச் சென்றடைந்த போதிலும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, பொலீஸ் மா அதிபர், வட பிராந்தியத் தளபதி மேஜர் ஜென்ரல் அசோகா ஜெயவர்த்தனா ஆகியோர் பயணம் செய்த பெல் - 412 ரக ஹெலி திடீரெனச் சுமார் 3 மணித்தியாலங்கள் வரை காணாமற் போயிற்று.

இறுதியில் ஹெலிக்கொப்டர் வவுனியாவுக்கு வடகிழக்கே அடர்ந்த காட்டில் திடீரெனத் தரையிறக்கப்பட்டது.

ஹெலிக்கொப்டரில் உள்ள திசைகாட்டியில் தவறு ஏற்பட்டதாலேயே செல்லும் திசை தெரியாமல் மூன்று மணித்தியாலங்களாக அது பறந்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள காட்டுப் பகுதியில் தரை இறங்கிய ஹெலியில் இருந்த பிரதி அமைச்சரும் ஏனைய உயர் அதிகாரிகளும் சுமார் 5 கி. மீற்றர் நடந்தே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள முகாம் ஒன்றைச் சென்றடைந்தனர்.

அங்கிருந்து அவர்கள், விமானப் படையின் மற்றொரு ஹெலியில் மணலாறு சென்று பின்னர் கொழும்பு மீண்டனர்.

தரை இறக்கப்பட்ட ஹெலி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே தரையிறக்கப்பட்டது. இருப்பினும் அதிர்ஷ்டவசமாக எதுவும் நடைபெறவில்லை. பாதுகாப்புப் படையினரின் இறுதிக் காவலரணில் இருந்து சுமார் 4 கி. மீற்றர் தூரத்தில் ஹெலி தரையிறக்கப்பட்டது.

தரையிறக்கப்பட்ட ஹெலிக்கு விடுதலைப் புலிகளால் பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்பிருந்தது. ஆனால் எது வித பிரச்சினையுமின்றி அமைச்சரும் குழுவினரும் அதிர்ஷ்ட வசமாகத் தப்பிக் கொண்டனர்.

அமைச்சரும் ஏனையோரும் பாதுகாப்பாகத் திரும்பி வருவதை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. (அ-3-10)

# கல்விக் கல்லூரி நேர்முகப் பரீட்சை

கல்விக் கல்லூரிகளுக்கு ஆரம்ப கல்வி, விஞ்ஞானம், உடற்கல்வி, கணிதம், ஆங்கிலம் ஆகிய துறைகளில் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பித்து, இதுவரை நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்களுக்கு எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் அன்று காலை 9 மணிக்குத் தோற்றலாம் என்றும் —

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்காதவர்கள் கல்வித் திணைக்களத்தில் உள்ள பட்டியலைப் பார்த்து பின்னர் தோற்றலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## ஜெயலலிதா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் எட்டரைக் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை கூடுதலாக வழங்கப்பட்டு இருப்பதாக வழக்கில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் இந்திய குற்றவியல் சட்டம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின்படி குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு இயக்க அதிகாரிகள் நேற்று செல்வி ஜெயலலிதாவின் போயஸ் கார்டின் வீட்டில் சோதனை மேற்கொண்டார்கள்.

இந்தச் சோதனை பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை.

செல்வி ஜெயலலிதா வருமான வரி செலுத்தவில்லை என்ற காரணத்துக்காக இந்த வீடு வருமான வரித்துறையினரால் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக, முன்னாள் முதலமைச்சர் ஒருவரைக் கைது செய்வதற்கு மாநில ஆளுநரின் முன் அனுமதி அவசியம் இல்லை என்று நீதிபதி குறிப்பிட்டார்.

ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்டுவரும் இசட் பிரிவு பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சிறைச்சாலையில் அவருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குமாறும் நீதிபதி சிறைஅதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட வீட்டில் நேற்றுக் காலை அவர் கைது செய்யப்பட்டபோது அவர் வீட்டின் முன்பாகக் கூடியிருந்த சிலர் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியிருந்ததற்காகக் கைது செய்யப்பட்டார்கள்.

ஜெயலலிதாவின் வீட்டுக்கு அருகே முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா, முன்னாள் அமைச்சர்கள் எஸ். திருநாவுக்கரசு, வி. சத்திய மூர்த்தி, டி. ஜெயகுமார் ஆகியோரையும் காவல்துறையினர் கைது செய்தார்கள்.

அனைவரும் பின்னர் வேலூர் மத்திய சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

தாம் கைது செய்யப்பட்டிருப்பது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

மு. கருணாநிதி தலைமையிலான அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகளை வெளிக் கொணருமாறு அவர் தமது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

மாநிலங்களில் ஏற்பட்ட சிறு சம்பவங்கள் தவிர நிலைமை இயல்பாகவே இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மதுரையில் அ. தி. மு. க. துணைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே. காளிமுத்துவும் அவரது ஆதரவாளர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டார்கள்.

பாண்டிச்சேரியில் முன்னாள் முதலமைச்சர் இராமச்சந்திரனும் வேறு சிலரும் ஜெயலலிதா கைது செய்யப்பட்டது குறித்து ஆர்ப்பாட்டம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டனர்.

ஜெயலலிதா கைது செய்யப்பட்டது தொடர்பாக ஜனதாக் கட்சித்தலைவர் சுப்பிரமணிய சுவாமி கருத்துத் தெரிவிக்கையில், இது முதலமைச்சர் மு. கருணாநிதி அச்சத்தினால் எடுத்த நடவடிக்கை என்றும் —

தாம் அவருக்கு எதிராகக் கொடுத்த மனுக் காரணமாக அவருக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும் — தெரிவித்தார்.

சட்டத்தின் முன்பாக அனைவரும் சமம் என்று மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்தார்.

ஜெயலலிதாவுக்கு எதிராக செயல்படுவதன் காரணமாக முன்னாள் அ. தி. மு. க. அமைச்சர்கள் சிலரை தமிழ் நாடு அரசு தப்பவிட்டுள்ளதாகவும் கோபாலசாமி கூறினார்.

ஜெயலலிதாவின் கைதும், அவரது வீட்டு சுவீகரிப்பும் நிச்சயமாக ஒரு பழிவாங்கும் நடவடிக்கையே என்று பாரதீய ஜனதாக்கட்சியின் தமிழ் நாடு பொதுச் செயலாளர் மைத்ரே தெரிவித்தார்.

(இ-3)

## கொழும்புத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலான குழு ஒன்று இது தொடர்பான விசாரணைகளை நடத்தியது.

கொள்கலன்களைக் கடத்துவதற்காக கடந்த இரு வருடங்களில் ஒரு கொள்கலனுக்கு 10 லட்சம் ரூபா என்ற ரீதியில் 10 கோடிக்கும் அதிகமான தொகையை இந்த தமிழ் வர்த்தகர்கள் சுங்க அதிகாரிகளுக்குச் செலுத்தியிருந்தார்கள் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

ஏழு சுங்க அதிகாரிகளும் மற்றும் இரு தமிழ் வர்த்தகர்களும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

## விமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

அந்தப் பெண் திருகோணமலையில் கூட்டுறவுப் பரிசோதகராகப் பணியாற்றுகிறார் என விசாரணையின் போது தெரிய வந்தது.

(இ-10)

## திருமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோதனையில் ஈடுபட்டனர்.

கஸ்கிசன் வீதி, மத்திய வீதி உட்பட பல பகுதிகளில் உள்ள மக்களை முத்துக்குமாரசாமி கோயிலுக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தார்கள்.

[illegible]லை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இயல்பு வாழ்க்கை அங்கு பாதிக்கப்பட்டது.

(இ-3-150)

## அகதிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்தே அகதிகள் வெளியேற்றப்பட உள்ளனர் என்று 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

## மேலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் சங்கமித்த யாத்திரிகர் விடுதியில் உள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டதன் பின்னர் ஏழு பேர் வியாழன் இரவு கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் மூவர் யுவதிகள், நால்வர் இளைஞர்களாவர். இந்த இளைஞர்களில் ஒருவர் இரு கைகளும் அற்றவர்.

ஏனையோர் மீண்டும் வடபகுதிக்கான கப்பல் சேவை நடைபெறும் போது கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றனர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org